உ

சிவமயம்


அமரர்

# செல்லையா திருஞானசம்பந்தமூர்த்தி அவர்களின் மறைவு குறித்த

# ஞானவழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

எம் இதயக் கமலத்தில்
என்றும் இனிமையாக இருக்கும் அப்பா!
உங்களைக் கரங்கூப்பி சிரம்தாழ்த்தி
உங்கள் பூப்போன்ற பாதங்களில்
இம்மலரை சூட்டி வணங்குகிறோம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.



தாயின் மடியில் — 17.12.1928

முருகன் அடியில் — 15.11.2017

அமரர்

# செல்லையா
# திருஞானசம்பந்தமூர்த்தி

வீங்குபுகழ் ஏவிளம்பி வளமான ஐப்பசியின்
ஈர்பத்தோ டொண்பதுசேர் ஒரும் புதனன்றே
சீரார் திருஞான சம்பந்த மூர்த்தியவன்
பேரான ஈசனடி சேர்ந்தநாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமங் கைக்கூடுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத் தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை.

- - - - - - - - - -

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடையசுட லைப் பொடிபூசியென் உள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்உனைநாள்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மான் இவனன்றே.

- - - - - - - - - -

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பு
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோதம் நித்திலங் கொழிக்கும்
கோணமா மலையமர்ந் தாரே.

- - - - - - - - - -

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே.

- - - - - - - - - -

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

- - - - - - - - - -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருவிசைப்பா**

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

\- - - - - - - - - -

**திருப்பல்லாண்டு**

பாலுக்குப் பாலகன்வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னியதில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

\- - - - - - - - - -

**திருப்புராணம்**

அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணை கூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும்கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய.

\- - - - - - - - - -

**திருப்புகழ்**

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

\- - - - - - - - - -

**வாழ்த்து**

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறை விலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கந்த சஷ்டி கவசம்**

**நேரிசை வெண்பா**
துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலனருள்
கந்தர் சஷ்டி கவசம் தனை.

**குறள் வெண்பா**
அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடம்செய்யும் மயில்வா கனனார்
கையில் வேலால் எனைக்காக்கவென் றுவந்து
வர வர வேலாயுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலாய் எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரகண பவச ரரரர ரரர
ரிகண பவச ரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீராநமோ நம
நிபவ சரவண நிற நிற நிறென
வசர வணபவ வருக வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய் விட்டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுழுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பு பித்தம்
சூலை சயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோடநீ யெனக்கு அருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்காய்
மண்ணா ளரசரும் மகிழ்ந் துறவாக
உன்னைத் துதித்த உன்திரு நாமம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு முருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடும்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் பு தல்வா
பழநிப் பதிவாள் பால குமரா
ஆவினன் குடிவாள் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல் வராயா
சமரா பு ரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினே னாடினேன் பரவச மாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்தி பெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பதுன் கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென்றடியார் தழைத்திட வருள் செய்
கந்த சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டலியாம் சிவகுகன் தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலங்கு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க்கு யிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மார்பை ரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம் பெறக்காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுற செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
ஐவிர லடியினை அருளவேல் காக்க
கைகக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இரக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
அரையிருள் தன்னில் அணையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கி சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழங்கடை முனியும்
கொள்ளிவாற் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம்மராட்ச தரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படு மன்னரும்
கனபூசை கொள்ளும் காளியோட னைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுரு கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்ட திக்குள்ளோர் அடங்கலும் வசமாய்
திசைமன்ன ரெண்மர் செயல தருள்வர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளு மீரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வசத்துரு சங்காரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலெக் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள் என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகள் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெற்றி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரங்கல் செய்தி


# எசெக்ஸ் தமிழ்க் கழகம்
## ESSEX TAMIL SOCIETY

64 Glencoe Avenue, Ilford, Essex, IG2 7AN.
Tel & Fax :- 07919 910984
E-mail :- etsociety@hotmail.co.uk
Website :- www.essextamilsociety.com


எமது கழகத்தின் காப்பாளர்
***அமரர் திரு செல்லையா திருஞானசம்பந்தமூர்த்தி***

எமது கழகமும் அதன் முக்கிய அங்கமான எசெக்ஸ் தமிழ் அக்கடமி என்ற தமிழ்ப் பாடசாலையும் கிழக்கு இலண்டன் பகுதியில் Redbridge பகுதியில் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட தமிழ்ப் பாடசாலை என்ற பெருமையைப் பெறுவதற்கு முக்கிய காரணமாக இருந்த ஒரு மாமனிதர் இன்று நம்மிடையே இல்லை.

புலம் பெயர்மண்ணில் தமிழ்ச்சிறுவர்கள் தமிழை மறவாது தமிழ்படிக்கவும் வருங்காலச் சந்ததி நமது கலை, கலாசாரம், பண்பாடுகளை மறவாது வாழவும் ஒரு அமைப்பு உருவாகவேண்டும் என்ற திரு செல்லையா திருஞானசம்பந்தமூர்த்தி அவர்களின் பேரவாவைத் தனது இரண்டாவது மகளான திருமதி உமா ஜெயகுமாரின் உதவியுடன் செயற்படுத்தி அந்தப் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தார்.

அவரின் அந்த ஆசையை நிறைவேற்ற எமது கழகமும், தமிழ்ப் பாடசாலையும் கடந்த பதினெட்டு ஆண்டுகளாக மிகவும் வெற்றிகரமாக வளர்ச்சிகண்டு வீறுநடைபோட்டு இன்றுவரை பல மாணவர்களைத் தமிழில் சரளமாக உரையாடவும், அடுத்த சந்ததிக்குத் தமிழை வழங்க ஆசிரியர்களாகவும், உருவாக்கிய பெருமை எசெக்ஸ் தமிழ்க் கழகத்திற்கு உண்டு. இன்று இரண்டாவது சந்ததிக்கும் அழகு தமிழைப் படிப்பித்து வருவது நமக்கெல்லாம் பெருமை.

அமரர் திரு திருஞானசம்பந்தமூர்த்தியின் கனவின்படி அவரது வழிநின்று நாமும் தமிழையும், தமிழ்ப் பாரம்பரியங்கள் அழியவிடாமல் அடுத்தடுத்த சந்ததிகளுக்கு வழங்க எமது கழகம் எத்தனை இடர் வந்தாலும் அத்தகைய இடர்கள் அனைத்தையும் தகர்த்து அயராது பாடுபடும் என்றும் நாம் உறுதி கூறுகின்றோம்.

அன்னாரின் பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினர்கள்,முக்கியமாக எமது தமிழ்ப் பாடசாலை அதிபர் திருமதி உமா ஜெயகுமார், அவர்களது குடும்பத்தினர் அனைவருக்கும் ஆண்டவன் ஆறுதலை வழங்க ஆறுமுகனை வேண்டுகின்றோம்

ஓம் சாந்தி!

**கழக உறுப்பினர்கள், நிர்வாகத்தினர்,**
**தமிழ்ப் பாடசாலை ஆசிரிய ஆசிரியைகள் பெற்றோர்கள், மாணவர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீமன்காமம் வடக்கு தெல்லிப்பளை மக்களுக்கான சர்வதேச சங்கம்

## INTERNATIONAL ASSOCIATION FOR PEOPLE OF VEEMANKAMAM, NORTH TELLIPPALAI, SRI LANKA (IAPOV)

# திரு. செல்லையா திருஞானசம்பந்தமூர்த்தி

**நீண்ட போரினால் துன்பமுற்றோரின் துயர் துடைத்த ஆத்மா சாந்தியடைந்தது.**

உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்த வீடுகள் தரை மட்டமாக்கப்பட்டுக் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுத் தமிழினம் செய்வதறியாது அவலமுற்ற வேளை, வசதி உள்ளவர்கள் அகதிகளாக வெளி நாடுகளில் தஞ்சம் புக, வசதி அற்றவர்கள் இலங்கையிலேயே உயர் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே அகதிகளாக்கப்பட்டனர். அவ்வாறு அகதிகளாகிய மக்களில் வீமன்காமம் வடக்கு தெல்லிப்பளையைச் சேர்ந்த மக்களும் அடங்குவர். வீமன்காமம் வடக்கு தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் ஆவரங்கால், கொழும்பு, இலண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட காலம் சென்ற திருஞானசம்பந்தமூர்த்தி அவர்கள் தான் பிறந்த கிராமத்து மக்களின் துயர் துடைக்கவென எண்ணி அக்கிராமத்தவர்களான எம்மை அழைத்து வீமன்காமம் வடக்கு தெல்லிப்பளை மக்களுக்கான சர்வதேச சங்கத்தை 2002 ஆம் ஆண்டு உருவாக்கி அதன் கிளைகளை இங்கிலாந்திலும், பிரான்சிலும், கனடாவிலும், அவுஸ்திரேலியாவிலும் நிறுவி அதன் காப்பாளராகத் தனது இறுதி மூச்சுவரை இருந்து தாயகத்தில் இன்னல் உற்ற மக்களுக்குக் கல்விக்கும், உணவிற்கும், மருத்துவத்திற்கும், முதியோர் பராமரிப்புக்கும் மரணச்சடங்கிற்கும் என வகை வகையாகப் பிரித்துப் பண உதவி செய்யக் காரணமாக இருந்த ஓர் உத்தம ஆத்மா ஆவார். இறை நம்பிக்கை, இன உணர்வு, நேர்மை, சேவை மனப்பான்மை, மிதித்த இடத்துப் புல் சாகாத தன்மை, உறவினர்களையும் நண்பர்களையும் அரவணைத்து அன்பு பாராட்டித் தன்னுடன் தங்க வைத்து அன்போடு விருந்தோம்பும் பண்பு என்பன அவரின் சிறப்பம்சங்களாகும். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தாருக்கும் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைக் கூறி அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போய்வா திருமகனே

போய்வா திருமகனே!
பொன்னான என் மைத்துனரே!
வாராந்தத் தொலைபேசி ஓடிவரும் என்று
வழிமேல் விழிவைத்து நான் காத்திருந்தேன்
வந்தது என்னமோ வான்பொழியும் சோக மழை

நான் முன்னே போகின்றேன்
நீங்கள் பின்னே வாருங்கள் என்று போனீரோ!
விதி வந்து அழைத்தவுடன் விண்ணுலகம் போனீரோ!
எம்மைஎல்லாம் தவிக்கவிட்டு விண்ணுலகம் போனீரோ!

எட்டு வாரிசுகளை ஏற்றம்பெற வாழ வைத்த
வந்தாரை அரவணைத்து நெஞ்சம் குளிர வைத்த
ஊர்பேர் போற்றும் உத்தமனார் மைத்துனரே!
விண்ணுலகம் போய்வா திருமகனே!

வானவர் தேவர் வானத்து வெளிதனில்
வெள்ளித் தேரேறி வெண்பரி தனில் வந்து
பூமழை சொரிந்து புனித மோட்ச உலகிற்கு
அழைத்துச் செல்லும் திருமகனே!
போய் வா திருமகனே! புத்துலகில் முக்திபெற
போய்வா திருமகனே!

**கதிர் பாலசுந்தரம் (ஓய்வுநிலை அதிபர் யூனியன் கல்லூரி)**

❋ ❋ ❋ ❋ ❋

## ஆவரங்கால் ஒன்றியம் - பெரிய பிரித்தினியா

மாவீரம் தந்த புறநானூற்றின் வாரிசு
சிவதலம் ஆவரங்கால் மண்ணில்
பேரோடும் புகழோடும் வாழ்ந்த பெருமகன்
அமரர் செல்லையா திருஞானசம்பந்தமூர்த்தி
ஆவரங்கால் மண்ணின் அன்பு மருமகன்
மாவை முருகப்பெருமானின் இனிய புதல்வன்
தமிழ் மண்ணிற்குப் போர்வீரம் தந்த தந்தை
புறநானூற்றின் வழிவந்த புனிதவாரிசு
நொந்து வரும் சமூகத்தின் அன்பான சேவகன்
பலர் மெச்சிப் புகழும் சிறந்ததோர் குடும்பஸ்தர்
அமரர் நிறைகுடமாய் சிவபதம் அடைய
சிவதலம் ஆவரங்கால் மைந்தர் நாம் பிரார்த்திக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம்

யாழ் வீமன்காமம் வடக்கைப் பிறப்பிடமாகவும் இலண்டனை வதிவிடமாகவும் கொண்டவரும், இலண்டன் வாழ் எமது கழக உறுப்பினராகிய செல்வமூர்த்தியின் அன்புத் தந்தையுமான அமரர் திரு செல்லையா திருஞானசம்பந்தமூர்த்தி அவர்களின் மறைவையொட்டிய கண்ணீர் அஞ்சலி

கண்ணெனச் சுற்றத்தை நேசித்துக்
கனிவாய் வாழ்ந்திருந்தீர்
உற்றார் உறவினரைப் பேணி
உள்ளன்பு காட்டி இனிதாய் வாழ்ந்து
இரண்டாயிரத்துப் பதினேழில் உயிரை
விட்டுச் செல்லும் உத்தமரே உமை
எண்ணி எல்லோரும் கலங்குகின்றோம்
எம்மோடு வாழ்ந்த உம் அன்புக்காய்
எம் அன்பைத் தருகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயிருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

❋ ❋ ❋ ❋ ❋

# நடேஸ்வரக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - பெரிய பிரித்தானியா

நடேஸ்வரக் கல்லூரியின் பழைய மாணவரும், பிரித்தானியாவின் நடேஸ்வரக் கல்லூரி பழைய மாணவர் மாணவர் சங்கத்தின் அறங்காவலருமான, எமது பெருமதிப்பிற்குரிய திரு செல்லையா திருஞானசம்பந்தமூர்த்தி அவர்கள்தம் மறைவு எங்களை மிகுந்த துயரத்தில் ஆழ்த்தியிருக்கிறது!

தனது கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவுகளை நடேஸ்வர கல்லூரியிலேயே கற்று தேர்ந்த திரு திருஞானசம்பந்தமூர்த்தி அவர்கள், தனது நற்பண்புகளினால் சகமாணவர்களினதும், ஆசிரியர்களினதும் அன்புக்கு பாத்திரமானவராக மிளிர்ந்தார்.

இருபது வருடங்களின் முன்னர் நாம் நடேஸ்வரக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் பிரித்தானிய கிளையை நிறுவியபொழுது, எமது சங்கத்தின் அறங்காவலராக கடமையாற்ற முன்வந்து, உழைத்து, எமது சங்கத்தை நிறுவ பேருதவி புரிந்தார். மேலும் எமது தாயகத்து சுதந்திரப்போரினால் இன்னலுற்ற, தனது பிறந்த ஊராகிய வீமங்காமத்து மக்களின் துயர் துடைக்க ஒரு சர்வதேச சங்கத்தை நிறுவி இந்த தள்ளாத வயதிலும் தன்னாலான பெருந்தொண்டாற்றினார். இவ்வாறான இனஉணர்வு கொண்ட திரு திருஞானசம்பந்தமூர்த்தி அவர்கள், எமது கல்லூரி மாணவனாக அமைந்திருப்பதையிட்டு நாம் பெருமிதமடைகிறோம்.

திரு செல்லையா திருஞானசம்பந்தமூர்த்தி அவர்களின் பிரிவால் வாடும் அவரது மனைவி திருமதி செல்லப்பாக்கியம் திருஞானசம்பந்தமூர்த்தி அவர்களுக்கும், பிள்ளைகளுக்கும், உறவினர்களுக்கும் எமது மனமார்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரது ஆன்மா இறைவன் திருவடிகளை அடைந்து சாந்தி பெற பிரார்த்திப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

அன்புடனே சீராட்டி தூக்கி மடிமீது இருத்தி
இன்பமுடன் நல்லுணவு ஊட்டி- துன்பமற
விளையாடும் தாத்தாவே! உங்கள் முகம்
எப்போது இனிக் காண்போம்!
பாடசாலை விட்ட நேரம் தூக்கிவரும்
தாத்தா உமை மறப்போமா?
வீடு வந்த நேரம் வெறுங்கையுடன் விடாமல்
வீதியில் உள்ள கடையில் வாங்கித் தந்த
இனிப்புக்களை மறப்போமா?
படி படி நன்றாகப் படி உன்று அறிவூட்டும் தாத்தா
நல்லாய் படித்து பட்டம் பெற
ஊக்கம் தந்த தாத்தா நாம்
என்றும் உள்ளத்தால் மற்ப்போமா?

## என்னுடைய அப்பா!

எங்கே அப்பா சென்றீர்கள்? உங்களைப் போல் ஒரு அப்பாவை இனி எங்கு காண்பது? பிள்ளைகள் என்று எங்களுக்காகவே வாழ்ந்தீர்கள். நினைக்கும்போது நெஞ்சு கலங்குகிறது. நான் வெறுமையாய் நிற்கும்போது மனத்துணிவு தந்து கைகொடுத்து நல் வழிகாட்டி வாழவைத்து, தினமும் தொலைபேசியில் கதைத்து, வாழ்வில் நல்ல அறிவுரையும் பண்பும் சொல்வீர்கள். இனி யாரை "அப்பா" என்று அழைப்பது? எல்லாக் கடமைகளையும் செய்து முடித்துவிட்டேன் என்று அவசரமாய்ப் புறப்பட்டுவிட்டீர்களா? இன்றுவரை நம்ப முடியவில்லை அப்பா! கடைசியாகத் தொலைபேசியில் கதைக்கும்போது நன்றாய்க் கதைத்தீர்களே! நான் நல்ல சுகம், நன்றாய் இருக்கிறேன். அதுதான் நீங்கள் கடைசியாகச் சொன்ன வார்த்தைகளாகிவிட்டதே! அப்பா, ஏழு ஏழு பிறவி எடுத்தாலும் அப்பாவை மறக்க முடியுமா? அப்பா இனி எப்போது உங்களைக் காண்பது! உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கிறோம்.

**பாப்பா, நவம் (மகள், மருமகன்)**

## எங்கள் அன்பான தாத்தா

எங்கள் அன்பான தாத்தா! நீங்கள் இல்லாமல் நாம் மிக வருந்துகின்றோம். நாம் உங்களைப் பார்த்தது இருமுறைகள்தான். அன்பான உங்கள் அரவணைப்பை என்றும் நாம் மறக்கமாட்டோம். நாம் வெறுமையாக நிற்கும் போதும் எம்மை வழிகாட்டினீர்கள். நாம் என்ன ஆசைப்பட்டோமோ அதையெல்லாம் செய்துவிட்டீர்கள். நீங்கள் எப்போதும் எம்முடன் தொலைபேசியில் அழைத்து அன்புடன் நிறையக் கதைப்பீர்கள். தாத்தா நீங்கள் எப்போதும் எம் இதயத்திலே நீங்காமல் வாழ்வீர்கள்.

**தரணிதரன், ஜதுசுவர்ணா (பேரப் பிள்ளைகள்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயரச்செய்தி

மாவைக் கந்தனைத் தரிசிக்க அடுத்த ஆண்டு வருகிறேன் என்ற கூறிவிட்டு விண்ணகம் சென்று விட்டீர்களே அப்பா! இயற்கையை மீறி எவரும் இயங்கமுடியாது என்பதனை இயல்பாக எனக்கு உணர்த்திவிட்டு எங்கு சென்றீர்கள் அப்பா!

நாளுங் கோளும் பார்த்தே வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தீர்கள். விஷமெல்லாம் அமிர்தமாகும் திதியைத் தேர்ந்தெடுத்து விண்ணகம் சென்றுவிட்டீர்களே அப்பா!

இறுதிப்பயணத்தின் போதுகூடச் செல்வது அவர்களுடைய சுயநம்பிக்கை, சுயகட்டுப்பாடு, சுயகௌரவம் என்பதனை எளிதாகப் புரியவைதீர்கள் அப்பா! நான் செய்த புண்ணியம் தங்கள் மகளாக இவ் அகிலத்தில் வந்தேன். நான் செய்த பாவம் சிறகொடிந்த பறவையாய்த் தனியாக வெகு தொலைவில் நின்றுவிட்டேன். அன்புள்ள அப்பா! என்றும் நீங்கள் என் நினைவில் நீங்கா இடம் கொண்டிருப்பீர்கள்!
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**சகலகலாதேவி ஈஸ்வரன் (இளைய மகள்)**

உங்கள் பிரிவு தந்த துயரின் விம்பங்கள் பார்தனில் விழும்போது
தாம் செய்த நல்வினைகள் வானுயர்ந்து சென்றனவே.
எண்ணிப் பார்த்தோம்; அவை நட்சத்திரங்களை விஞ்சிவிட்டனவே!
பார் போற்றும் நல்மனிதர் மறைந்தாலும்
மறையாது அவர் புகழ்.

**ஈஸ்வரன் (மருமகன்)**

Grandpa! Though you have left us so suddenly, my mind is unable to admit it; because a cascade of memories are flowing within me, creating an illusion that you are still with us and you will be with us forever. But once my mind comes to the reality, the agony fills it and it gives such a pain that my mind seeks shelter back into the previous cascade of memories. You were affectionate not only towards your grandchildren, but also towards society. May, with the aid of all our prayers, your pure soul rest in peace.

**E. Ainkaran (Grandson)**

## தாத்தாவின் நினைவுகள்

என் பிறந்த தினத்திற்கு "Happy Birthday" என்று பாட்டுப் பாடித் தொலைபேசியில் வாழ்த்துவீர்களே தாத்தா. நானும் உங்களுக்கு "Same to you" என்று கூறுவேனே. ஏனெனில் எங்களிருவருக்கும் ஒரே நாளில் பிறந்தநாள். இனி யாரிடம் இப்படிக் கூற முடியும் தாத்தா? இந்தவருடம் எனது பிறந்தநாளுக்கு நீங்கள் எனக்கு வாழ்த்துச் சொல்ல மாட்டீர்களே!

உங்கள் நினைவுகளுடன், **ஈ. செந்தூரன் (பேரன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈடிலா இணையடி எய்தினை அப்பா

இப்பியும் முத்தும் இன்தமிழ் இசைத்தே
உப்புறு கடலின் ஒலிதரும் அலைகளால்
துப்பார் கரையில் தூயதாய் ஒதுங்கும்
மப்பார் இந்து மாகடல் சூழ்ந்த
செப்பரும் இலங்கையின் சிரசாய் விளங்கும்
ஒப்பரும் யாழ்ப்பா ணம்எனும் பதியில்
தப்பா வளம்தரும் வலிகா மத்தில்
நீர்வளம் நிறைந்த நிலங்களும் புலங்களும்
பேர்பெறப் பயிற்றிடும் பள்ளிகள் பலவும்
சீர்பெற நிறைந்த தெல்லிப் பழையில்
வீறுடன் விளங்கும் வீமன் காமத்தில
இராச இராச சிங்க முதலியின்
பேர்சொல வாழ்ந்த வேலுப் பிள்ளையின்
வழிவழி வந்த நாக முத்தரும்
கிளைகளைத் துரங்கும் தங்கைப் பிள்ளையும்
திருமணத் திணைந்து திளைத்தன பயனாய்
ஒருதனி மகானய் உதித்த செல்லையா
அதேவழி வந்த நாகம் மாவைப்
பிதாவழி பற்றிப் புரிந்தனன் நன்மணம்
இணையர் இருவரும் இறைவழி நின்று
துணையாய் வாழ்வில் துலங்கினர் நன்றே
செம்புலத் துக்க பெயல்நீர் போல
அன்பெனும் கயிற்றால் கட்டினர் உறவு
நிறைந்த உறவால் நிறைந்தனர் பிள்ளைகள்
அறுவர் பிறந்தனர் ஆணும் பெண்ணுமாய்
அவர்களில் ஒருவரே என்னுடை தந்தையார்
அக்காள் இராச லட்சுமி யாளும்
தம்பிசி வபாத சுந்தரன் அவனும்
அருமைத் தம்பி குருமூர்த் தியானும்
பெருமைக் குரிய கனகாம் பிகையும்
உரிமைப் போற்றிடும் நகுலாம் பிகையும்
திருச்சேர் சால்புடன் சிறந்தனர் வாழ்வில்
சிறந்தனன் கல்வியில் திருஞான சம்பந்தன்
வீமன் காமத்து மகாவித் தியாலமும்
நடேஸ்வரக் கல்லூரி என்னும் சாலையும்
ஞானசம் பந்தனின் ஞானம் வளர்த்தன
கல்வியில் சிறந்ததால் கிடைத்தது நற்றொழில்
பொலீசெனப் பெயர்பெறும் காவல் துறையில்
நிலைபே றான தொழிலொன்று வாய்ந்தது
செய்யும் தொழிலே தெய்வமாம் என்று

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மெய்யாய்க் கடமை புரிந்தத னாலே
அய்யா பதவியில் விரைந்தே உயர்ந்து
முதன்மை எழுத்தர் எனும்நிலை எய்தினர்
பதவியில் நிலைத்துப் பணமும் ஈட்டினார்
குணமும் குலமும் குன்றா தவனை
மணத்தினில் மாட்டிட முனைந்தனர் பலபேர்
ஆவரங் காலில் அரசறிய வாழ்ந்த
கதிர்காமு வள்ளிப் பிள்ளையின் புதல்வி
மதிமுகச் செல்வி செல்வபாக் கியத்தாள்
விதிவழி வந்து அமைந்தனள் மனையாய்
இதமான இல்வாழ் வியற்றினர் இருவரும்
புத்திரச் செல்வமாய்ப் பொலிந்தனர் எண்மர்
மூத்தவள் பெயரோ ஞானசெல்வ வனதா
இரண்டா மவர்பெயர் செல்வ மூர்த்தியாம்
மூன்றா மவர்பெயர் பாக்கீஸ் வரனாம்
அடுத்தவர் பெயர்தான் திருச்செல் வஉமா
ஐந்தாம் இடத்தில் அமர்ந்தனர் ஞானகலாசெல்வி
ஆறாம் பிள்ளையாய் ஆகினர் செல்வேந்திரனார்
அடுத்தவர் பெயரோ கோசலாதேவி
எட்டாம் கால்தான் சகலகலா தேவி
மூத்தவள் முடித்தனள் சுகுமார் நம்பியை
அடுத்தவர் அணைத்தார் அழகுரா சினியை
மூன்றா மவரோ மருவினார் லலிதாம்பிகையை
நான்காம் பிள்ளை நயந்தாள் செயகுமாரை
ஐந்தாம் பிள்ளை மணந்தாள் நவரத்னராசனை
ஆறாம் பிள்ளைக்கு வாய்த்தனள் பிரியதர்சினி
ஏழாம் பெண்ணாட்டு வாய்த்தனன் மணிவண்ணன்
எட்டாம் பிள்ளைக்கு இயைந்தனன் ஈஸ்வரன்
எண்மரும் பெற்றனர் எழிலார் செல்வங்கள்
முறைமுறை அவற்றை மொழிகுவன் முறையே
அசிதன் சாளினி அச்சுதன் நாராயணன்
வெங்கடேஸ் ஜெயராம் அருணன் அஜந்தன்
தரணீதரன் யதுசுவர்ணா ஆரணி மாதங்கி
வர்சினி அர்ச்சனா அபிராமி சிவராம்
ஐங்கரன் செந்தூரன் எனும்பெயர் அவைதாம்
இராச ராசேஸ்வரி என்றிடும் கோயிலை
வழிபடு தெய்வமாய் வணங்கி வாழ்ந்தவன்
கோயிலின் திருப்பணி தொடக்கி வைத்தவன்
புகவிட வாழ்க்கையைக் கொண்டதன் மக்களின்
வேண்டுதல் தூண்டிட விட்டனன் தன்னூர்
ஓராயி யிரத்துத் தொள்ளா யிரத்துத்
தொண்ணூற் றிரண்டாம் ஆண்டுப் பகுதியில்
ஊரை விடுத்து இலண்டனை நோக்கிச்
சீராய் வந்தார் சம்பத் தமுரத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரார் உறவினர் உவந்தனர் கண்டு
நேராய் வாழ்ந்து நிமிர்ந்தவன் ஈண்டு
பேரர்க் காணப் பெயர்ந்தனன் என்று
வந்தவன் இங்கு இருந்திலன் சும்மா
சிந்தனை நிறைந்தவன் செய்தனன் பலபணி
பெற்றவத் தாயும் பிறந்தபொன் நாடும்
நற்றவ வானிலும் நனிசிறந் தனவெனும்
பொற்றமிழ் வாக்கியம் பொன்னாய்ப் போற்றியே
பிறந்தவந் நாட்டில் துயருறும் சிறார்க்கும்
உறவின ராக உலர்ந்திடும் அவர்க்கும்
மறந்திடா துதவி வழங்கினன் எந்தை
புகலிட வாழ்வில் புத்திபே தலித்துத்
தம்மொழி மறந்திடும் நந்தமிழ்ச் சிறார்க்குச்
செம்மொழி யாம்தமிழ் தெரித்திட வேண்டி
எசெக்ஸ்தமிழ்க் கல்விக் கழகம் அமைத்தனன்
என்னையும் அங்கு பயிற்றிட வேண்டினன்
இன்றது வளர்ந்து இறுமாந் தியலுது
பொன்றாப் புகழொடு பொலிந்தவென் தந்தை
திருஞான சம்பந்த மூர்த்தியாம் பெரியன்
திடுதிப் பென்று தீர்த்தனன் வாழ்வை
கடுவிடம் உண்ட கண்டனின் அழைப்பினால்
திடவுளம் கொண்டவன் செய்தவை எல்லாம்
திடமாய் நமக்குத் துணைசெயக் காண்போம்
ஈடிலா இணையடி எய்திய அப்பனைப்
பாடிநாம் வாழ்வில் பொலிகுவம் இனிதே.

❋ ❋ ❋ ❋ ❋

## மனைவி மக்கள் மருமக்கள் புலம்பல்

தந்தையும் தாயுமாகித் தரணியில் நல்ல
தார்மீக சேவையும் பகர்ந்து
பந்தபாசம் காட்டிச் சொந்தம் சொல்லி
பாரினில் அரியவல்ல கல்வியும் பொருளும்
ஈந்துவிட்ட இன்று வரை உடனிருந்து
பாசத்தின் தலைமகனே வாழ்ந்த
எந்தையே உந்தன் வாழ்க்கை மீண்டும்
வாராது என்று காண்பது உண்டோ சொல்லுங்கோ!

❋ ❋ ❋ ❋ ❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TRIBUTE TO LATE MR. S.T.S. MOORTHY

**A True Gentleman and A Noble Person who was the Patron of 3 charitable Organisations**

I write with deepest sadness on the demise of Mr. Selliah Tirugnanasampanthamoorthy a cousin of mine on 15/11/2017 in London at the age of 88; formerly of Veemankamam North Tellippalai, Aavarankal and Colombo and lately of London. He was a down to earth, God fearing and sincere person who readily extended his hands to help other people at all times. He was the chief clerk at the head office in the Sri Lankan Police department in Colombo and also worked as a reserve police inspector in Sri Lanka during his career spanning for more than 40 years. During the period he lived in Colombo, he accommodated hundreds of people including me at his house in Bandaranayake Mawatte Colombo without a single cent being charged from them. He was a person with noble qualities and a man of self-dignity and respect. He set an example for living with self-respect and for principles. During the time he lived in the UK he became the patron of three charitable organisations namely International Association for People of Veemankamam North Tellippalai (IAPOV), Nadeswara College Old Students Association UK and Essex Tamil Society UK. In order to alleviate the poverty and suffering of the people of his birth place, Veemankamam North Tellippalai, whose houses were destroyed and the lands were occupied by the Sri Lankan armed forces in the so called High Security Zone he initiated and kick started the International Association for People of Veemankamam North Tellippalai (IAPOV) and members of which living around the world have donated millions of Sri Lankan rupees to help their people who were refugees in their own land over a period. It is not important as to how long you lived and it is not important as to how much wealth you heaped for yourself either. But what is important is how ethically you lived your life and how you cared for the people around you, as this is the yardstick that is used by the Almighty God and the rest of the world to value and measure the success and worth of your life. Late Mr.S.T.S.Moorthy lived a full life and performed all the religious duties which are expected from a Hindu. He followed the path laid down and enshrined within the Hindu religious scripts. The divine Tamil poet Thiru Valluvar said "One who had a marital life as guided by the saints and the gurus of religious wisdom will attain heaven and will be placed among the Gods who dwell there". I am sure that Late Mr.S.T.S.Moorthy is now placed among the Gods. May I take this opportunity to join othersin expressing my heartfelt condolences to the family and friends of late Mr.Thirugnanasampanthamoorthy and pray to Almighty God to rest his soul in peace?

Om Shanthi! Shanthi! Shanthi!

**Mr. S. Srikanthalingam**
**18, Swinderby Road,**
**Wembley, Middlesex,**
**HA0 4SF,**
**UK.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரங்கல் செய்தி

# இலண்டன் ஸ்ரீமுருகன் கோயில்

**78-90 Church Road, London, E12 6AF.**

**Tel: 020 8478 8433**

# இறைவன் திருவடியில் இளைப்பாறுக

இலண்டன் ஸ்ரீமுருகன் ஆலயத்தின் பக்தர்களில் ஒருவரான இலங்கை யாழ்ப்பாணம் வீமன்காமம் வடக்குப் பகுதியைச் சேர்ந்த திரு செல்லையா திருஞானசம்பந்தமூர்த்தி அவர்கள் இறைவனடி சேர்ந்த செய்தியறிந்து மிகவும் துயரமடைந்தோம்.

திரு. செ திருஞானசம்பந்தமூர்த்தி அவர்கள் சமயத்திற்கும், சமுதாயத்திற்கும் குடும்பத்தார்க்கும், நாட்டிற்கும் பல சேவைகளையும், கடமைகளையும் ஆற்றி வாழ்ந்து மறைந்தவர் இவர் ஆத்ம ஈடுபாட்டோடு மட்டுமல்லாமல் தான் உழைத்துச் சம்பாதித்த பொருளைச் சமயத்திற்கும், சமுதாயத்திற்கும் பிறந்த நாட்டிற்கும் வழங்கி, மகிழ்ந்து வாழ்ந்தவர் அமரர் திரு திருஞானசம்பந்தமூர்த்தி அவர்கள். எப்போதும் சிரித்த முகத்தோடு எதையும் எதிர்பாராமல் பழகி வந்த இவர்தம் மறைவு எங்களுக்குப் பேரிழப்பாகும்.

எளிமை, தூயமனது,கனிவு, கருணை,அன்பு,பாசம் இவற்றின் உறைவிடமாகத் திகழ்ந்து மறைந்த அமரர் திரு திருஞானசம்பந்தமூர்த்தி அவர்களது ஆத்மா சாந்தியடைந்து இறைவன் திருப்பாத கமலங்களில் என்றென்றும் இளைப்பாற வேண்டியும், அவரது பிரிவால் துயருற்று வாடும் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார்,உறவினர்கள் அனைவரும் மன ஆறுதல் பெற வேண்டியும் எல்லாம் வல்ல இரண்டன் ஸ்ரீமுருகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்
**இலண்டன் ஸ்ரீமுருகன் கோயில் சிவாசாரியர்கள்**

| | |
|---|---|
| கயிலை இரா.நாகநாதசிவம் குருக்கள் | கயிலை க. சோமாஸ்கந்த குருக்கள் |
| கயிலை கி சங்கரக் குருக்கள் | சிவஸ்ரீ கை கணேச குருக்கள் |
| சிவஸ்ரீ சு செல்லப்பா குருக்கள் | சிவஸ்ரீ கி கல்யாணசுந்தர குருக்கள் |
| சிவஸ்ரீ மு சந்தானசிவம் குருக்கள் | சிவஸ்ரீ செ கௌரிசங்கர குருக்கள் |
| சிவஸ்ரீ சு கணபதிசுந்தரக் குருக்கள் | சிவஸ்ரீ மு ஜனார்த்தனசர்மா குருக்கள் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வம்சா

## தந்தை வழி

இராஜகெம்பீர முதலியார் வம்சம்

வேலுப்பிள்ளை — வள்ளியம்மை

நாகமுத்து — தங்கச்சிப்பிள்ளை

செல்லையா — நாகம்மா

## தாய் வழி

கந்தப்பிள்ளை — சின்

மூத்ததம்பி

இராசலட்சுமி + பூலோகசிங்கம்

**திருஞானசம்பந்தமூர்த்தி** + செல்வபாக்கியம்

சிவபாதசுந்தரமூர்த்தி + சரஸ்வதி

கனகாம்பிகை + பாலசுந்தரம்

ஞானசெல்வவனதா + சுகுமாரன் → அசிதன்

செல்வமூர்த்தி + இராஜினி → சாளினி, அச்சுதன்


பாக்கீஸ்வரமூர்த்தி + லலிதாம்பிகை → நாராயணன், வெங்கடேஷ், ஜெயராம்

திருச்செல்வஉமா + ஜெயகுமார் → அருணன், அஜந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவலி

## மனைவி வழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரங்கல் செய்தி

# இலண்டன் ஸ்ரீமுருகன் கோயில்

78-90 Church Road, London, E12 6AF.

Tel: 020 8478 8433

இறைவன் அருளப்பட்ட கிடைத்தற்கரிய மனிதப்பிறவியில் தன்னலமற்ற மனஉறுதியோடு சமயப்பற்றும் சமூக சேவைப் பாங்கும் கொண்டு வாழ்வதுதான் வாழ்க்கையின் லட்சியமாகும்.

இலங்கையில் பிறந்து பல நாடுகளில் பணியாற்றி நிறைவாக இலண்டனில்தனதுகுடும்பத்தாருடன் வாழ்ந்து மறைந்த அமரர் திரு. திருஞானசம்பந்தமூர்த்தி அவர்கள் இலண்டன் ஸ்ரீமுருகனிடத்தில் தீராத பக்தி கொண்டவர். கோயிலுக்கு செல்லாத நாள்வாழ்க்கையில் பாழான நாள் என்று கூறிவந்த அவர் கடைசி வரை இறைவனை வழிபாட்டுஇறைவனடி அடைந்துள்ளார்.

அமரர் திரு. திருஞானசம்பந்தமூர்த்தி அவர்கள் ஆத்மா சாந்தியடைந்து என்றென்றும் இலண்டன்ஸ்ரீமுருகப் பெருமானின் திருவடிகளில் இளைப்பாற வேண்டியும் அவர்தம் பிரிவால் கலங்கிநிற்கும் மனைவி மக்கள் உற்றார் உறவினர் அனைவரும் மன ஆறுதலடைய வேண்டியும் எல்லாம் வல்ல இலண்டன் ஸ்ரீமுருகப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்,

சீனி சம்பத்குமார்

தலைவர்,இலண்டன் ஸ்ரீமுருகன்கோயில்

அறங்காவலர்கள் மற்றும்

நிர்வாகக் குழுவினர் சார்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

எமது குடும்ப விருட்சமாக விரிந்து படர்ந்து நிழல் தந்த எங்கள் அன்புத் தெய்வம் திரு செல்லையா திருஞானசம்பந்தமூர்த்தி அவர்களின் காலத்தோடு கலந்ததால் ஏற்பட்ட தாங்கொணாத் துயரத்தில் நாமிருந்த வேளைகளில் ஓடோடி வந்து எமது துயரத்தில் பங்கேற்று ஆறுதல் அளித்தோர். அனுதாபங்களைத் தெரிவித்து அளவற்ற அன்போடு அரவணைத்தோர், தொலைபேசி மூலமாக எங்களின் துயரோடு தங்களின் துயரையும் பகிர்ந்து கொண்டோர் அனைவருக்கும் நாம் நன்றி தெரிவிப்பதோடு அஞ்சலி செலுத்தியோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், உற்ற நேரத்தில் உதவிகள் புரிந்தவர்களுக்கும், எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.நன்றி!

என்றும் அன்புடன் குடும்பத்தினர்.

## சிந்தனைக்கு...

வாழ்க்கையில் கற்றுக்கொள்வதில் குழந்தைபோல் இரு.
அதற்கு அவமானம் தெரியாது.
விழுந்தவுடன் அழுதுமுடித்து திரும்பவும் எழுந்து நடக்கும்.

மீண்டும் ஒரு முறை முகம் பார்த்து பேசவேண்டியிருக்குமே என்ற ஒரு காரணத்திற்காகவே நம்முடைய பல கோபங்கள் தற்கொலை செய்துகொள்கின்றன.

இவ்வுலகில் வாழக் கற்றுக்கொண்டதைவிட வலிகளை மறைத்து சிரிக்க கற்றுக் கொண்டதே அதிகம்.

நேர்மையாக சம்பாதித்த பணம் பெரும்பாலும் கோயில் உண்டியல்களுக்கு வருவதில்லை.

துரோகிகளிடம் கோபம் இருக்காது. கோபப்படுபவர்களிடம் துரோகம் நிச்சயமாக இருக்காது.

பணத்தின் மதிப்புத் தெரியவேண்டுமா? செலவு செய்யுங்கள்.
உங்களின் மதிப்புத் தெரியவேண்டுமா? கடன் கேளுங்கள்.

நோய் வரும் வரை உண்பவன் உடல் நலமாகும் வரை உண்ணாதிருக்க வேண்டிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org